எமது இரண்டாவது வெளிநிறைவை முன்னிட்டு
21 - 12 - 85 முதல்
31 - 12 - 85 வரை
வீடியோ படங்கள்
அரைச் சலாரில்
விநியோகிக்கப்படும்.
செல்வம்
வீடியோ சென்ரர்
கே. கே. எஸ். ரோட்,
மல்லாகம்.

உதயன்

விலை ரூ-1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கலைமான தமிழ், ஆங்கில ஹிந்தி
படப் பிரதிகளையும்
T.V. டெக்
முதலியவற்றையும்
வாடகைக்குப்
பெற்றுக கொள்ள
இன்றே நாடுங்கள்
செல்வம்
வீடியோ சென்ரர்
கே. கே. எஸ். ரோட்,
மல்லாகம்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு மார்கழி மீ 06 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 08 (21-12-1985) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:- 25

விமானங்கள் தாழப் பறக்க

கொழும்பகம் அரியாலையில் தீவிர சல்லடை

2 பேர் மரணம் ; 2 பேர் காயம்

— அலுவலகச் செய்தியாளர்: வனிராஜன் —

யாழ்ப்பாணம், டிச. 21

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் ஆயுதப் படையினர் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர்.

தேடுதல் நடந்த சமயம் ஹெலிக்கொப்டர் விமானங்கள் தாழப் பறந்து பாதுகாப்பு வழங்கின.

அவற்றில் ஒன்றின் மீது ரொக்கெற் லோஞ்சர் தாக்குதல் நடந்ததைத் தொடர்ந்து வானத்திலிருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இரண்டரை மணி நேரம் நடந்த தேடுதல், துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களைத் தொடர்ந்து முகுவர் மரணமானார்கள். மற்றும் இருவர் காயமடைந்தனர். பல வீடுகள் குண்டு பட்டுச் சேதமடைந்தன.

இத் தேடுதல் நடவடிக்கை பற்றி அறிய வருவதாவது:–

நேற்று வெள்ளிக்கிழமை ஒரு மணியளவில் நான்கு ஹெலிக்கொப்டர்கள் சுவில் ஆயுதப்படையினர் கொழும்புத்துறை மகாவித்தியாலயத்தில் வந்து இறங்கினர்.

முறிகண்டியில் மது, மாமிச விற்பனைக்கு தடை

தாளையடி, டிச 21

முறிகண்டி ஆலய சுற்றுடலில் கோயிலில் இருந்து 200 யாருக்கு உட்பட்ட பிரதேசத்தில் மாமிச உணவுகள், மதுபானப் பொருள்கள் விற்பனை செய்வதற்கு முறிகண்டி இணக்கசபை தடை விதித்துள்ளது.

இது தொடர்பான சுவரொட்டிகள் அப்பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.

நூறுபேர் வரையில் ஆயுதப்படையினர் வந்திறங்கினர்.

அவர்–ஹெலிறக்கிவிட்டு ஹெலிகொப்டர்கள் மேலெழும்பி, படையினருக்கு பாதுகாப்பு வழங்கிய வண்ணம் பறந்து கொண்டிருந்தன. பின்னர் படையினர் இலந்தைக்குளம் வீதியை நோக்கிச் சென்றனர். அங்குள்ள சில வீடுகளைச் சோதனை இட்டனர்.

தந்தையும் மாமனாரும் பார்த்து இருக்க இளைஞன் ஒருவன் சுடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அந்த இளைஞனின் பெயர் ராஜேந்திரன் சுபாஸ்கரன் - வயது 18. பேக்கரியில் வேலை செய்தவர்.

அவரின் நெஞ்சு, தலை, காது, வழியாக துப்பாக்கிச் சூடுகள் சென்றன.

அதன் பின்னர் விதிக்கு வந்த சமயம் படையி

(4-ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
21 - 12 - 1985
சனிக்கிழமை
சுபநேரம்:
3–25 முதல் 4–55 வரை
ராகுகாலம்:
09 25முதல் 10–55வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

கைதிகளை விடுவிக்க ஹெலிக்கொப்டரை கடத்தினர் பெண்!

வாஷிங்டன், டிச.20

ஒரு அமெரிக்கப் பெண் ஹெலிக்கொப்டரைக் கடத்திச் சென்று மூன்று கைதிகளை விடுவித்துக் கொண்டு தப்பி ஓடியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலையில் அமெரிக்காவில் தென் கரோலினா மாநிலத்தில் இச் சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெண், விமான நிலையத்தினுள் நுழைந்து துப்பாக்கியைக் காட்டி மிரட்டி விட்டு ஹெலிக்கொப்டரைக் கடத்திச் சென்றார்.

பின்னர் சீர் திருத்தப் பள்ளி ஒன்றின் வளவில் ஹெலிக்கொப்டரை இறக்கி, அந்தப் பள்ளியில் இருந்த 3 கைதிகளை விடுவித்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டார்.

அச்சமயம் காவலாளர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். திருப்பி அவர்கள் சுட்டனர்.

இதில் காவலாளர் ஒருவர் காயமடைந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

★ தமிழருக்கு எதிரான

அந்தி ஒழியும் வரை அரசுடன் பேச்சு இல்லை

கூட்டணி அரசியல் குழு முடிவு

சென்னை, டிச. 20

இலங்கைத் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் அந்திகள் நிறுத்தப்படும்வரை–

கூட்டணியினரின் மாற்று யோசனைகளுக்கு இலங்கையிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும்வரை –

இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சு நடத்தும் வாய்ப்புக்கள் எழமாட்டா.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு (பொலிற் பீரோ) தீர்மானித்துள்ளது.

அரசியல் குழு நேற்று வெள்ளிக்கிழமை சென்னையில் கூடியது.

நேரடிப் பேச்சுகளுக்கு இலங்கை வரும்படி, இலங்கை அரசிடம் இருந்து கூட்டணிக்கு அழைப்பு எதுவும் வரவில்லை என்று கூட்டணி பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இனப் பிரச்சினை தீர்வுக்கான கூட்டணியின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொள்ளையின் எதிரொலி

கல்முனை பிரதேசத்தில் பூரண ஹர்த்தால்

– அம்பாறை மாவட்ட செய்தியாளர் –

அம்பாறை, டிச. 21

கல்முனையிலும் அதைச் சுற்றுள்ள முஸ்லிம் கிராமங்களிலும் நேற்று முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் அண்மையில் இடம் பெற்ற கொள்ளையை ஆட்சேபித்தும்–

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை திருப்பி ஒப்படைக்குமாறு கோரியுமே இந்த ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

'அல் பதாஹ்' என்ற அமைப்பே இந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்திருந்தது.

சம்மாந்துறை, கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று,

(4 ஆம் பக்கம் பார்க்க)

பதற்றத்தினால் விபத்து

யாழ்ப்பாணம், டிச. 21

படையினர் நேற்று நகரில் தேடுதல் நடத்திக் கொண்டிருந்த சமயம், சாவகச்சேரி நோக்கிப் போய்க் கொண்டிருந்த ஒரு மினிபஸ் மாம்பழச் சந்திக்கு அருகில் பதற்றத்தில் திடீரென்று திருப்பப்பட்டது. அச்சமயம் பயணிகள் மேடு விழுந்து காயமடைந்தனர்.

காயம் அடைந்தவர்கள் விபரம் வருமாறு;

1. தர்மலிங்கம் ரேவதி, வயது 21. நுணாவில் வாசி. 4 மாதக் கர்ப்பிணி இவருக்கு பற்கள் உடைந்தன. இடது கை, வலது கால் முறிவு.
2. கனகசபை மங்கையற்கரசி, வயது 49. மட்டுவில் வாசி. மட்டுவில் அரசாங்க நெசவு ஆலையில் ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார்.

இவருக்கு வலதுகால் முறிவு, தலையில் காயம். யாழ் கச்சேரியில் சம்பளம் எடுக்க வந்த சமயம் விபத்துக்கு ஆளானார்.

இரண்டு பேரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டுநகர் சந்தையில் துப்பாக்கிச்சூடு

2½ மணிநேரம் பதற்றம்

மட்டக்களப்பு, டிச.21

மட்டக்களப்புச் சந்தை நேற்று வெள்ளிக்கிழமை பகல் சுமார் இரண்டரை மணி நேரம் கலங்கியது. சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் வானைப் பிளந்தபோது, மக்கள் பதற்றம் அடைந்து அங்கும் இங்கும் சிதறி ஓடினர்.

நேற்றுக் காலை பத்து மணியளவில் மட்டக்களப்புரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து ஆயுதப்படையினர் மீது இரண்டு குண்டுகள் வீசப்பட்டன.

ஆயுதப்படையினர் திருப்பிச் சுட்டனர். இருதரப்பிலும் எவரும் காயமடையவில்லை.

சிறிது நேரத்தில் படைவீரர்கள் வாகனங்களில் சந்தையடிக்கு வந்து வானத்தை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர். மக்கள் பதற்றம் அடைந்து அங்கும் இங்குமாகச் சிதறி ஓடினர்.

பின்னர் மட்டக்களப்பு நகரம் முழுவதுமே பதற்றம் பரவியது.

கடைகள் இழுத்து மூடப்பட்டன. சனநடமாட்டம் குறைந்தது.

வல்வையில் ஹெலிக்கொப்டர் மீது ரொக்கட் தாக்குதல்

காரவெட்டி, டிச 21

திக்கம், பொலிகண்டிப் பகுதியில் நேற்று ஹெலிகொப்டர் மீது ரொக்கட் லோஞ்சரினால் தாக்குதல் நடத்தப்பட்டது.

வல்வெட்டித்துறையில் இருந்து நடைபவனியாக புறப்பட்ட இராணுவத்திற்கு பாதுகாப்பாக இந்த ஹெலிகொப்டர் திக்கம், பொலிகண்டிப் பகுதியில் பறந்து கொண்டிருந்தது.

ஹெலிகொப்டரிலிருந்து திருப்பிச் சுடப்பட்டது. எவினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆனால் சில வீடுகளில் ஓடுகளே வேட்டுகள் பகம் பார்த்திருந்தன. சில கால் நடைகள் இறந்தன.

இந்நச் சம்பவத்தினால் இப்பகுதிகளில் சில மணித்தியால நேரம் பதற்றம் நிலவியது.

பருத்தித்துறையில் தொற்றுநோய்

தாளையடி, டிச 21

பருத்தித்துறை கிழக்கில் உள்ள ஆழியவளை என்னுமிடத்தில் குழந்தைகளுக்கு சின்னமுத்து, கண்நோய், கூகைக்கட்டு அகிய நோய்கள் மிக மோசமாகப் பரவி வருகின்றன.

அப் பகுதியில் சின்னமுத்து நோய் காணப்பட்ட ஐந்து வயதுக் குழந்தை ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மரணமாகியது.

தமிழர்கள் புகலிடம் தேடி வெளிநாடு சென்றது ஏன்?

சுவிஸ் தூதுக் குழுவிடம் மதத் தலைவர்கள் விளக்கம்

–அலுவலகச் செய்தியாளர்:– வி. வி. எஸ்.–

யாழ்ப்பாணம், டிச.21

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மதத் தலைவர்கள் இங்கு வந்துள்ள சுவிஸ் அரசாங்கத் தூதுகோஷ்டியினரை யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுசந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்கள்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தென்னிந்திய கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த பிஷப் டி. ஜே. அம்பலவாணர், கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த வண. பிதா மைக்கல்சாமி,பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா, இஸ்லாமிய பிரமுகர் ஜனாப் அப்துல் காதர், ஜமாதே இஸ்லாமியாவைச் சேர்ந்த பிரமுகர்கள் ஆகியோரும் இன்னும் பலரும் மதத் தலைவர்கள் குழுவில் அங்கம் வகித்தனர்.

தமிழ் மக்கள் பல்வேறுதுறைகளில் எதிர் நோக்கும் பிரச்சினைகள்; அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ள வன்செயல்கள்; அகதிகளாயுள்ள மக்களின் அவலம் ஆகியவற்றை சுவிஸ் அரசாங்க தூது கோஷ்டியினருக்கு மதத் தலைவர்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

★ பதற்றம் பரபரப்பு மத்தியிலும் இப்படி ஒரு சம்பவம்!

யாழ்ப்பாணம், டிச.21

இராணுவ தேடுதலினால் யாழ்ப்பாண நகரம் பதற்றமடைந்திருந்த பட்டப் பகல் வேளையில் மாணவி ஒருவர் பலவந்தமாகக் கடத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அரசகரு மாதாகோவிலுக்கு சமீபமாக நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் சுமார் 1·35 மணிக்கு நடந்தது.

அவ்வேளையில் திடீரென வெள்ளைநிற டெலிக்கா வான் ஒன்று அவர்கள் முன்னால் வந்து நின்றது.

வானில் சாரம் அணிந்த இருவரும் காற்சட்டை போட்ட ஒருவரும் இருந்தனர். மூன்றாமவரே வானை ஓட்டி வந்தார்.

மூவரும் வீதியில் வந்து கொண்டிருந்த மாணவியரில் ஒருவரை பலவந்தமாக இழுத்து வானுக்குள் ஏற்ற முயற்சித்தனர்.

ஆனால் பக்கத்தில் வந்த தோழிகளிடமில்லை.

(4-ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

எப்பவோ செய்திருக்க வேண்டிய வேலை. முறி கண்டிப் பிள்ளையார் பேராலே இவினாவது அந்த ஆருசங்கினரிறுத்த எல்லோரும் ஒத்துழைக்க வேணுமடாதம்பி.சும்மா சுவரொட்டி ஒட்டினு மட்டும் போதாது.

பேச்சுக்களை மட்டும் நம்பி இருக்கலாகாது;

திடசித்தமும் அக்கறையும் தேவை என்கிறார் தொண்டா

இந்தியா செல்லுமுன் பேட்டி

கொழும்பு, டிச 21

பேச்சுக்களை மட்டும் நாம் நம்பி இருக்கக் கூடாது

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் நாம் திடசித்தத்துடனும் தீவிர அக்கறை கொண்டவர்களாகவும் செயல்பட வேண்டிய கால கட்டம் இது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் அளித்த சிறப்புப் பேட்டியில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் மூன்று தரம் பேச்சுக்களை நடத்திய பின்னர் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நிறப்புப் பேட்டி ஒன்றை அளித்தார்.

இந்திய வம்சாவளியினரின் பிரஜா உரிமைப் பிரச்சினை, இனப் பிரச்சினை, தீவு முழுவதிலும் வாழும் தமிழருக்குப் பாதுகாப்பு வழங்குதல் — ஆகிய பிரச்சினைகளை ஜனாதிபதி—தொண்டமான் சந்திப்பில் இடம்பெற்றன.

தமிழக விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய பின்னர் அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதியுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவார் என்றும் கூறப்படுகின்றது.

அமைச்சர் தொண்டமான் பேட்டியில் மேலும் சொன்னதாவது:–

பேச்சுக்களை மட்டும் நாம் நம்பி இருக்கக் கூடாது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்குத் தேவையான மன உறுதி எமக்குத் தேவை. அதை வளர்க்க வேண்டும்.

தீவிர அக்கறையுடன் செயல்பட வேண்டிய காலம் இது.

ஆகவேகாள் மலையகத் தமிழர் மத்தியில் மன உறுதியை வளர்க்க பிரார்த்தனை ஒன்றை

(4-ஆம் பக்கம் பார்க்க)

ரூ.11 லட்சம் பெறுமதி சிகரட் கொள்ளை

மட்டக்களப்பு, டிச 21

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு 11 லட்சம் ரூபா பெறுமதியான சிகரட்டுகளை ஏற்றிவந்த லொறி ஒன்று, மட்டக்களப்புக்கு அருகில் பிள்ளையாரடி எனுமிடத்தில் வழிமறிக்கப்பட்டு, கொள்ளை இடப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை காலை இச் சம்பவம் நடந்தது.

கடத்திச்செல்லப்பட்ட லொறி கல்லடிப் பாலத்துக்கு அருகில் வியாழன் பிற்பகல் 3 மணியளவில் வைடிப்பட்ட நிலையில் காணப்பட்டது.

கொள்ளையடித்தவர்கள் லொறியின் சாரதி, லிளையர் ஆகியோரைக் கண்களைக் கட்டி வழியில் இறக்கி விட்டனராம்.

ஆயுதப்படையினர் கடத்தப்பட்ட இடத்தில் நேற்றுக்காலை தேடுதல் நடத்தினர். அச்சமயம் கொள்ளை இடப்பட்ட சிகரட்டுகளில் ஒரு பகுதி கைப்பற்றப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

சூட்டுக் காயத்துடன் சடலம் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, டிச 21

மட்டக்களப்பு — செங்கலடி வீதியில் கொடுவாமடு என்னும் இடத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்த ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சடலத்துக்கு அருகில் டிராக்டர் ஒன்றும் எரிந்த நிலையில் காணப்பட்டது.

அது சத்துருக்கொண்டானைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியரின் சடலம் என்று பின்னர் அடையாளம் காணப்பட்டது. இறந்தவர் 5 பிள்ளைகளின் தந்தை.

இதற்கு முதல் தான் தான் அந்த வீதியால் ஆயுதப் படையினர் ரோந்து சென்றிருந்தனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

நீதிபதியும் ஜூரர்களும் பணயக் கைதிகளாயினர்

பாரிஸில் அதிர்ச்சி தரும் சம்பவம்

பாரிஸ், டிச 20

வழக்கு ஒன்றை விசாரித்துக் கொண்டு இருந்த நீதிபதியும் ஜூரர்களும் உட்பட 16 பேர் ஆயுதம் தரித்த மூன்று பேர்களினால் கடத்திச் செல்லப்பட்டு, பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

பாரிஸ் நகரில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் இச்சம்பவம் இன்று (வெள்ளிக்கிழமை) காலை இடம் பெற்றது

வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்யும்படி கோரியே இவர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்தது.

ஆரம்பத்தில் 35 பேர் கடத்தப்பட்டனர். பின்னர் 19 பேரை ஆயுதக் கோஷ்டியினர் விடுவித்து விட்டனர்.

இப்பொழுது பணயக் கைதியாக வைக்கப்பட்டுள்ள எஞ்சியவர்களில் நீதிபதியும் ஜூரர்களும் அடங்குகின்றனர்.

இதுவரையில் பிரெஞ்சுப் பொலீசார், ஆயுதக் கோஷ்டியினருடன் பேச்சுக்களை நடத்துகின்றனர்.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், பணயக் கைதிகளில் சிலர் கொல்லப்படுவார்கள் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்ணி வெடி 6 வெள்ளையர் பலி

ஹராரே, டிச. 20

தென் ஆபிரிக்கா-ஸிம்பாப்வே எல்லையில் கண்ணி வெடி ஒன்று வெடித்ததால் 6 தென் ஆபிரிக்க வெள்ளையர்கள் கொல்லப்பட்டனர்.

இதனிடையில் தென் ஆபிரிக்காவில் இனவெறிக்கான வன்செயல்கள் அதிகரித்து உள்ளன.

கல்யாணம் என்றாலே ரேகா சிறிப் பாய்கிறார்!

ஹிந்திப் படத்தாரகையான ஜெமினி கணேசனின் மனைவி ரேகாவுக்கு கல்யாணம் பற்றிக் கேட்டாலே, கோபம் பொத்துக்கொண்டு வருகிறது.

அவர் சீறிப் பாய்கிறார் இப்படி:

"ஆண்கள் எல்லாம் மோசமான வஞ்சகர்கள். கல்யாணம் செய்து கொள்ளக் கூடிய தகுதியான ஆண்களே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

காலம் எல்லாம் கன்னியாக இருப்பது பற்றி எனக்குக் கவலையே இல்லை.

அப்படியே தெரியாத்தனமாகக் கல்யாணம் ஆனால் கூட, ஒரு குழந்தையைப் பெற்றுக்கொண்டு விவாகரத்துச் செய்து விடுவேன்" என்றார் மீண்டும் கோபமாக ரேகா.

தினசரி சினிமா

ஊர்வசி மலையாளத்தில் ஒரே 'பிஸி'

தமிழ்ப் படவுலகில் பல வெற்றிவாகைகளைப் பெற்றவர் ஊர்வசி. பல மொழிப் படங்களில் இப்பொழுதும் நடித்துக் கொண்டிருக்கிறார் இவர்.

மலையாளப் படவுலகில் இவருக்கு இப்பொழுது நல்ல மவுசு. அதிலும் பிரபல மலையாள டைரக்டர் பாலச்சந்திர மேலவின் படத்தில் நடித்ததன் பின், இவரின் 'மார்க்கட்' விறுவிறு என்று ஏறிக்கொண்டிருக்கிறது

ஹிவாஜி -- பத்மினி மீண்டும் இணைகிறார்கள்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பத்மினி இன்னும் பெயரிடப்படாத ஒரு படத்தில் மீண்டும் இணைகிறார்கள்.

இன்று 'பிஸி' நடிகையாகத் திகழும் ரேவதியும் இப்படத்தில் நடிக்கிறார். படப்பிடிப்பு மிக விரைவாக நடைபெறுகிறது.

வெளி உலகில்

தென் ஆபிரிக்காவின் பொருள் இறக்குமதிக்கு சுவீடனில் தடை

சுவீடன், டிச 20

தென் ஆபிரிக்காவில் இருந்து விலைபொருள்களை இறக்குமதி செய்வதை சுவீடன் ஜனவரியில் இருந்து தடை செய்யத் தீர்மானித்துள்ளது.

சுவீடன் நாடாளுமன்றத்தில் வெளிநாட்டமைச்சர் இத்தகவலை அறிவித்தார்.

தென் ஆபிரிக்காவில் இன வெறிக் கொள்கையை ஆட்சேபித்துசுவீடன் இந்தத் தடையை விதிக்கத் தீர்மானித்து உள்ளதுஎன்றும்வெளிநாட்டு அமைச்சர் அறிவித்தார்.

சுவீடன் அரசின் முடிவை, கன்சர்வேடிவ் கட்சியைத் தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள் வரவேற்றுள்ளன.

தமிழக அமைச்சர் பார்வையிட்டார்

சென்னை, டிச. 20

வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிபேட்டை எண்ணுமிடத்தில் உள்ள 30 இலங்கைத் தமிழ் அகதிக் குடும்பங்களை தமிழ்நாடு மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு. டி. இராமசாமி நேரில் பார்வையிட்டார்.

விமானத்தினுள் புகைக்கத் தடை!

சுவீடன் அரசு முன்மாதிரி

ஸ்டொக்ஹோம், டிச. 20

சுவீடன் விமான சேவையின் சகல விமானங்களிலும் புகைபிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

புகைபிடிப்பதைத் தடை செய்த முதலாவது விமான சேவை என்ற பெயர், சுவீடன் நாட்டுக்கு இதன் மூலம் கிடைக்க உள்ளது.

1986 ஜனவரி 20 முதல் இத்தடை அமுலுக்கவரும்.

விமானப் பயணிகள் மத்தியில் நடந்த கருத்துக் கணக்கெடுப்பில் புகைக்கும் பயணிகள் கூட, புகைக்காத விமானப் பயணத்தையே விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர்.

சுவீடன் நாட்டின் விமான சேவையின் பெயர் 'லிஞ்மீலிக்' ஆண்டு தோறும் இவ்விமானங்களில் 37 லட்சம் பயணிகள் பிரயாணம் செய்கின்றனர்.

இஸ்ரவேல் தொடர்பு துண்டிக்கக்கோருகிறது ஐ. நா.

ஐ.நா. டிச 20

இஸ்ரவேலுடனான சகல தொடர்புகளையும் துண்டிக்கும்படி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது அங்கத்வ நாடுகளைக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமான பிரேரணை ஒன்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கடந்த திங்கட் கிழமை நிறைவேற்றப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 86 நாடுகளும் எதிராக 52 நாடுகளும் வாக்களித்தன. 37 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இஸ்ரவேலுக்கு ஆயுதங்கள் விற்கக் கூடாது. அங்கிருந்து வாங்கவும் கூடாது.

இஸ்ரவேலுடனான சகல பொருளாதார, தொழில்நுட்ப, ராஜதந்திர, கலாசார,வர்த்தகத் தொடர்புகளையும் உறுப்பு நாடுகள் இடை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் ஐ.நா. தீர்மானம் கூறுகின்றது.

சிரியாவுக்கு அமெரிக்கா வேண்டுகோள்

வாஷிங்டன், டிச. 20

விமான எரிப்பு ஏவுகணைகளை லெபனான் — இஸ்ரவேல் எல்லையில் இருந்து அகற்றும்படி சிரியாவை அமெரிக்கா கேட்டுள்ளது.

இஸ்ரவேலின் முறைப்பாட்டைத்தொடர்ந்தே, அமெரிக்கா இந்தவேண்டுகோள் விடுத்தது.

இராணுவச்சட்டம் நீக்க பிரேரணை நிறைவேறியது

இஸ்லாமாபாத், டிச 20

ஜனவரியில் இருந்து இராணுவச் சட்டத்தை நீக்கும் சட்ட மூலம் ஒன்றைப் பாகிஸ்தான் நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

பாகிஸ்தான் ஜனாதிபதி சியாவுல் - ஹக் 1974இல் பதவிக்கு வந்தகாலத்தொடர்ந்து இராணுவச் சட்டமும் நடைமுறைக்கு வந்தது.

கெரில்லாக்கள் - அரசு ஒப்பந்தம் கைச்சாத்து

நைரோபி,டிச.20

உகண்டா ஆட்சியாளரும் தேசிய இராணுவ கெரில்லாப்படையினரும் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்

மூன்று மாதங்களாக நடந்த பேச்சுக்களின் பின்னர் இந்த உடன்பாடு காணப்பட்டது.

20 ஆண்டுகால இரத்தக் களரியின் பின்னர், உகண்டாவில் சமாதானம் நிலவ இந்த உடன்படிக்கை வழி கோலும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

உகண்டாவில்

20 ஆண்டுகளுக்கு பின்பும் பயனியர் இயங்குகிறது

நாஸா, டிச. 20

20 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவினால் வானவெளிக்கு அனுப்பப்பட்ட 'பயனியர் 6' விண்கலத்தில் இருந்து சமிக்ஞைகளை நாஸா பதிவு செய்தது.

இந்த 'பயனியர்' விண்கலம் 14-12-1965 இல் அனுப்பப்பட்டது. 6 மாதங்களுக்குமட்டுமே இயங்கக் கூடியதாக இது அமைக்கப்பட்டது. 20 ஆண்டுகளுக்குப் பின்னர் இதில் இருந்து கடந்த திங்கள் கிழமை சமிக்ஞைகள் கிடைக்கப் பெற்றன.

$3\frac{1}{2}$ கோடி வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மிருகம்

மாஸ்கோ, டிச. 20

மூன்றரைக் கோடி வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த கொம்புகள் இல்லாத ஒரு காண்டாமிருகத்தின் எலும்புகள், கஜாக்ஸ்தானில் 40 மீட்டர் ஆழப்பாறையின் அடியில் புதைபள்ளத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தக் காண்டாமிருகத்தின் உயரம் 5 மீட்டர். இது சுமார் மூன்றரைக் கோடி வருடங்களுக்கு முன்பு வாழ்ந்திருக்க வேண்டும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

அந்தப் பள்ளத்தில் கருங்கல் பாறைகள் இருந்தன; அவற்றில் தாவர இலைகளின் தடங்கள் தெளிவாகத் தெரிந்தன.

இந்தக் காண்டாமிருகத்தின் எலும்புகள், கஜாக்ஸ்தான், இயற்கை வளப் பொருட்காட்சியில் இப்போது 4,000 பொருள்கள் உள்ளன; தொன்மையான பலவகைத் தாவரங்கள் மற்றும் மிருகங்களின் வாழ்க்கைக்கு இவை சான்றுகளாகும்.

சுமார் 40 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஓர் ஒட்டகத்தின் எலும்புக்கூடு இந்தப் பொருட்காட்சியில் உள்ளது தியன் ஷான் மலையில் கடல் மட்டத்திற்கு மேல், 2200 மீட்டர் உயரத்தில், அது கண்டுபிடிக்கப்பட்டது. இன்றைய ஒட்டகத்தை இனங்களை விட அந்த ஒட்டகம் மிகப் பெரிதாக இருந்தது; அதன் மண்டையோடு மட்டும் ஒரு மீட்டர் நீளம் இருந்தது!

அஸாமில் மக்கள் கட்சியே மாநில அரசு அமைக்கும்

இந்திரா- காங்கிரஸ் இடைஞ்சலாக இருக்காது

புதுடில்லி, டிச. 20

அஸாம் மாநிலத்தில் மாநிலக் கட்சியான அஸாம் கண பரிஷத் அரசு அமைப்பதற்கு இந்திரா காங்கிரஸ் இடைஞ்சலாக இருக்கமாட்டாது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

கோவாவிற்கு விஜயம் செய்து விட்டு புதுடில்லி திரும்பும் முன்னர் பிரதமர் செய்தியாளர் மத்தியில் பேசினார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது;

தேர்தல் முடிவுகள் அனைத்தும் இன்னும் வெளியாகவில்லை.

தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் பொழுது இந்திராகாங்கிரஸ் இன்னும் சிறப்பாக வேலை செய்து இருக்கலாம் என்று எண்ணுகின்றேன்.

அரசு அமைக்கும்படி அஸாம் கணபரிஷத்தை மாநில ஆளுநர் அழைத்தால் இந்திரா காங்கிரஸ் இடைஞ்சலாக இருக்க மாட்டாது —இப்படிப் பிரதமர் அறிவித்தார்.

அஸாம் மாநில மக்கள் தீர்ப்புக்குத் தலைவணங்கு, என்றேன் என்று தற்போது மாநில முதல் அமைச்சராக இருக்கும் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த திரு. வைத்யா சொன்னார்.

பிரதமரின் கூற்று, ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து இந்திராகாங்கிரஸ் கூட்டு அரசு ஒன்று அமைக்கும் என்ற ஊகத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டது.

பொலீஸார் மீது எலி வீச்சு!

ஸ்பெயின், டிச. 20

வீடுகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதை ஆட்சேபித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் உயிருள்ள எலிகளை, பொலீஸார் மீது வீசினர்.

500 பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி, பொலீஸாருடன் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது மோதியது.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கைவிடப்பட்ட நிலையில் இருந்த அரசாங்கக் கட்டடம் ஒன்றைக் கைப்பற்றினர். பொலீஸார் கட்டடத்தில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்களை பின்னர் வெளியேற்றினர்

டெலிவிஷன் லைசென்ஸ்

கோட்டை முகாம் அலுவலகத்தில் திங்கட்கிழமை முதல் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச 21

டெலிவிஷன் லைசென்ஸ் யாழ். பிரதம தபால் நிலையத்தில் வழங்கப்படமாட்டாது. பதிலாக கோட்டை முகாமுக்கு அருகில் உள்ள தபால் அலுவலகத்திலேயே அவை வழங்கப்படும்.

டெலிவிஷன்லைசென்ஸ் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) முதல் கோட்டை அலுவலகத்திலிருந்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ். தபால் நிலைய அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை வானொலி லைசென்ஸ்களை வழக்கம் போல யாழ் பிரதம தபால் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் சொன்னார்.

ரயில் டிக்கட்டிற்கான காசுக் கட்டணங்கள் கோட்டை முகாமுக்கு அருகில் உள்ள தபால் நிலையப் பிரிவிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தெரிந்ததே.

இப்பிரிவு நிலமும் காலை 9 மணி முதல் 12 மணி வரை மட்டுமே திறந்திருக்கும்.

மருந்து தட்டுப்பாடு

காரைநகர் டிச.21

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் நோயும் இல்லைவைத்தியசாலைக்கு வரும் இருநூறுக்கும் மேற்பட்ட நோயாளிகள் ஏமாற்றத்துக்குள்ளாகின்றனர்.

இல்லைவைத்தியசாலைதரம் உயர்த்தப்பட்ட பின்பு மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி சங்கானை போன்ற பிரதேசங்களிலிருந்து சிகிச்சைக்காக மக்கள் இங்கு வருகின்றனர்.

முல்லைத்தீவில் ஹர்த்தால்

யாழ்ப்பாணம், டிச 21

அரியாலையில் மரணமான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) மூன்று உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக முல்லைத்தீவில் நேற்று முன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தாவினால் போதுகடைகள் மூடப்பட்டிருந்தன.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

தெல்லிப்பளையில் புதிதாக புற்று நோயாளர் விடுதி

பொதுமக்களிடமிருந்து உதவி கோரப்படுகிறது

நல்லூர், டிச 21

தெல்லிப்பளை வறுத்தலைவிளாளில் புற்று நோயாளர் விடுதி ஒன்றை அமைப்பதற்கு வடமாகாண புற்று நோயாளர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அருகாமையில் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான காணி ஒன்றை திரு. நி. தம்பிராசா என்பவர் விடுதி அமைப்பதற்கு நன்கொடையாக வழங்கமுன் வந்துள்ளார்.

இவ்விடுதியை பூரணமாக கட்டி முடிப்பதற்கு மேலும் சுமார் பத்து லட்சம் ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்குத் தேவையான உதவிகளை வழங்கும்படி வடமாகாண புற்று நோயாளர் சங்கம் பொதுமக்களைக் கேட்டிருக்கிறது.

உதவிகளை வழங்க விரும்புவோர் டாக்டர். மா. ஜெயநாதன், இலை 383, கே.கே.எஸ். றோட் யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ அல்லது திரு. இ. சிவரத்தினம்(சட்டத்தரணி)இல 32 - 4ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்.

நிர்வாகச் சேவை

பதவி உயர்வு ஐவருக்கு

வட்டுக்கோட்டைடிச.21

இலங்கை நிர்வாக சேவையின் இரண்டாம் வகுப்பின் முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவதற்கான நேர்முகப்பரீட்சை ஒன்று இலங்கை நிர்வாகசேவை அதிகாரிகளுக்கு அண்மையில் கொழும்பில் நடத்தப்பட்டது.

மேற்படி நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு பதவி உயர்த்தப்பட்டுள்ள வடபகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் ஐவரின் விபரங்கள் பின்வருமாறு:—

திரு. க. வைக்கிலிங்கம், சங்கானை, உதவி அரசாங்க அதிபர்.

திரு. எஸ். சபாபதிப் பிள்ளை, பூநகரி, உதவி அரசாங்க அதிபர் (கிளிநொச்சி மாவட்டம்.)

திரு. கே. அருந்தவச் செல்வம், மன்னார், உதவி அரசாங்க அதிபர்.

திரு. கே. பரமலிங்கம், கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர்.

திருமதி. க. சிவநிதம்பரம், யாழ். சமூகசேவை உதவி அத்தியட்சகர்.

இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தினரும் 'நான்' மஞ்சரியினரும் இணைந்து நடத்தும் கிறிஸ்மஸ் ஒளி விழாவும் 'நான்' 12 அவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும் இன்று நடைபெறுகின்றன.

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் மாலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு யாழ் பேராலயப் பங்குத் தந்தை அருள் திரு ஜெப தேசன் தலைமை வகிப்பார்.

வீமர்சன உரையை பேராசிரியர் கு. நேசையாவும் ஆய்வுரையை யாழ் பல்கலைக்கழக மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரமும் (நந்தி) நிகழ்த்துவர்.

யாழ் பாலன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

டாக்டர் ஜே.பி.சி. பீலிப் முதல் பிரதியை பெறுவார்.

'நான்' சஞ்சிகை ஆசிரியர் வண. வின்சன்ற் பற்றிக்கும் உரையாற்றுவார்.

'கண்டுக்குளி' புனித யோவான் தேவாலயத்தைச் சேர்ந்த வண ஜே. சர்வானந்தா நந்தார் நற்செய்தி வழங்குவார்.

✶

வட்டுக்கோட்டை,டிச.21

அரசாலி மேற்கு வடக்கு ஆரம்ப சுகாதார கவனிப்புச் சபையினர் வட்டுக் கோட்டை (கொட்டைக் காடு),அரசினர் வைத்திய சாலையில் இன்று காலை 9 மணியளவில் 'மனிதனின் மூளை வளர்ச்சி' பற்றிய கருத்தரங்கு ஒன்றை நடத்துகின்றனர்.

அராலி மேற்கு வடக்கு ஆரம்ப சுகாதார கவனிப்புச் சபைத் தலைவரும் முன்னாள் கிராமோதய சபைத் தலைவருமான திரு நா. குகராசா தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் மனோதத்துவ வைத்தியர் திரு. எஸ். கதிர்காமநாதன் விசேட கருத்துரையை வழங்குவார்.

✶

ஊர்காவற்றுறை.டிச.21

ஊர்காவற்றுறை பிரயாணிகள் சங்க அங்குராற்பணக் கூட்டம் இன்றுபிற்பகல்4.00மணியளவில் யாழ்-சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயத்தில் திரு. க. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

✶

வட்டுக்கோட்டை டிச 21

வட்டுக்கோட்டை கிழக்கு ஆரம்ப சுகாதார அபிவிருத்திச் சபையின் தொண்டர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று இன்று வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வடமாநில சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. கே. வைத்தீஸ்வரன் பிரதம விருத்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

வட்டுக்கோட்டை கிழக்கு ஆரம்ப சுகாதார அபிவிருத்திச்சபைத் தலைவரும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக முன்னாள் தலைவரும் வலயத் தலைவருமான டாக்டர் ரி. பிரதன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் தொண்டர்களது மீளாய்வும் பரிசிலனை செய்யப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

அவர்களில் 20 பேர்

தனியார் மருத்துவ கல்லூரி வேண்டுமா? வேண்டாமா?

சூடான வாதப் பிரதிவாதங்கள்

வடஇலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி சம்பந்தமான வாதப்பிரதிவாதங்கள் தற்பொழுது இடம் பெறுகின்றன.

தேசிய மாணவர் மன்றம் இதுசம்பந்தமானகருத்தரங்கு ஒன்றை அண்மையில்யாழ். பல்கலைக் கழக மாணவர் பொது அறையில் நடத்தியது.

யாழ் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகம், மருத்துவபீட மாணவர்ஒன்றியம், ஈழமாணவர் பொது மன்றம் ஆகியன கருத்தரங்கில் பங்குபற்றி அபிப்பிராயங்களை வெளியிட்டன.

அவற்றினைத் தொகுத்துத் தருபவர்: நல்லூர்செல்வி யாளர் திரு. க. இரத்தினராஜசிங்கம்.

மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்:-

இந்த தனியார் வைத்தியக் கல்லூரியின் செயற்பாடுகளை நாம் தராசில் இட்டுப் பார்க்க வேண்டும்.

மருத்துவக் கல்லூரி சீரான முறையில் இயங்க வேண்டுமானால் சீரான மருத்துவப் பயிற்சி ஏற்படுத்தப்பட வேண்டும்.

மாணவர்களின்தேவைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். பொருளாதார ரீதியாக கல்லூரி நிர்வாகம் தங்கள் தேவையை அடைய முடியாத நிலையும் இருக்கிறது.

யாழ் – மருத்துவபீடத்திற்கே தேவையான அளவு விரிவுரையாளர்கள் இல்லை. அந்த நிலையில் இவர்கள் இக் கல்லூரியை ஆரம்பிக்கிறார்கள். இதனால் எமது கல்வியின் நிலையும் சீர்குலைக்கப்படுமல்லவா?

யாழ் வைத்தியசாலையை ஒரு பூரண போதனா வைத்தியசாலை என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நிலையில் இந்தக் கல்லூரிக்கு எங்கிருந்து விரிவுரையாளர்களை, கொழில் நுட்ப உத்தியோகத்தர்களை, தாதிமார்களைப் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள்?

"மருத்துவபீடம் சமுதாயத்தின் சொத்து" இதனை சகலரும் உணர வேண்டும்.

தற்போதைய நடவடிக்கை இனிமேல் வருகின்ற யாழ்பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களைப் பாதிக்கலாம்.

இருப்பதை முழங்கடித்தே இவர்கள் இக்கல்லூரியை உருவாக்க முடியும். இதை அனுமதிக்க முடியாது.

தனியார் மருத்துவ கல்லூரிக்கு மூளாய் வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாகத் தெரிவு செய்துள்ளார்கள், விரிவுரையாளர்கள் குறைந்தளவில் இருக்கும் இவ் வேளையில் எப்படி இக் கல்லூரி மாணவர்களுக்கு மூளாய் சென்று பயிற்சியளிக்க முடியும்?

ஆனைப்பந்தியில் ஆரம்பிக்கப்பட இருந்த தனியார் மருத்துவக் கல்லூரி பலரின் ஆலோசனையின் பேரில் கைவிடப்பட்டது.

ரோட்டரிக் கழகமும் இப்படி ஒரு யோசனையை வைத்து இருந்தனர். எமது வேண்டுகோளின் பேரில் அவர்களும் அதனைக் கைவிட்டனர். ஆனால் இவர்கள் மட்டும் விடாப்பிடியாகப் பிடித்திருப்பது ஏன்? நாம் கேட்டபலகேள்விகளுக்கு இவர்களிடம் இருந்து சரியான பதில் இல்லை. இது ஏன்?

ஈழ மாணவர் பொது மன்றம் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை:

தேச விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் இந்தக் காலகட்டத்தில், தனியார் நிறுவனங்கள், தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இதன் செயற்பாடுகளை சீர்திருத்தும் நடவடிக்கைகளை கருத்திற்கொள்ளாமல் அதைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும்.

அரசாங்கம் செய்யாத ஒரு வர்க்க அடிப்படையில், இக் கல்லூரியில் மாணவர்களைத் தரப்படுத்தல் செய்யும் இந் நடவடிக்கையை தமிழ் மக்களின் சேவையாகக் கருதமுடியுமா?

யாழ் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை:

முதலாளித்துவ கல்வி முறையாக இந்த மருத்துவக் கல்லூரியின் கல்வி இருப்பதால் எமக்குக் கிடைக்கும் பல நன்மைகளை நாம் இழக்க நேரிடலாம்.

அகில இலங்கை ரீதியில் மருத்துவ பீடங்களுக்கு 400 மாணவர்கள் தெரிவுசெய்யப் படுகிறார்கள்.

ஒன்றே கால் இலட்சம் ரூபாவைப் பெற்று மாணவர்களைத்தெரிவு செய்தாலும் திறமையின் அடிப்படையிலும் மாவட்ட அடிப்படையிலும் தெரிவுகளை விஸ்தரிக்க வேண்டும்.

இக் கல்லூரியை நிறுவக்கூடாது என்ற கொள்கையை மாற்றி கல்லூரி அமைப்பு முறையில் சில மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

பாண்டியராஜாவாக வந்திருந்த ஒருவரின் கருத்து

தனியார் நிறுவனமான இந்தக் கல்லூரி இடை நடுவில் மூடப்படுமானால் அதன் சொத்து முழுவதும் யாழ் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைப்பது என்பது ஒரு நிபந்தனை.

ஆனால் அப்படியான சந்தர்ப்பத்தில் அக்கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களின் நிலை என்ன? இது கேள்விக் குறி.

இக் கல்லூரிக்கு 169 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன 80 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் 73 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மற்றைய ஏழு மாணவர்களுக்கும் நடந்தது என்ன?

மருத்துவக் கல்லூரி நிர்வாகத்தினால் கருத்தரங்கு அமைப்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் கருத்தரங்கில் முன் வைக்கப்பட்டன. அக் கருத்துக்கள் வருமாறு:

இது ஒரு தனியார் மருத்துவக் கல்லூரி அல்ல. வட இலங்கை மருத்துவச் சங்கத்திற்கே இது சொந்தமானது. இந்த மருத்துவக் கல்லூரி இன்னும் அரசாங்கத்தால் பதிவு செய்யப்படவில்லை இயங்கத் தொடங்கிய பின்னர்தான் பதிவு செய்யப்படும்.

இம் மருத்துவக் கல்லூரி தமது சொந்த லாபத்திற்காக இயங்கவில்லை. மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும், வைத்தியர்களை அதிகரிக்கவுமே ஆரம்பிக்கப் படுகின்றது.

"யாழ் பல்கலைக்கழகத்தில் 31 மாணவர்கள் மட்டுமே மருத்துவபீடத்தில் இருக்கிறார்கள். 14 முஸ்லிம் மாணவர்களும் கல்வி கற்கிறார்கள்.

இம் மாணவர்களின் எண்ணிக்கையை நாம் அதிகரிக்க வேண்டும். ஆகவே இக் கல்லூரியை நாம் ஆரம்பிப்பதில் தவறில்லை.

எமது கல்லூரிக்கு எதிராக குரல்கள் சமுதாயத்தில் இருந்து எழுப்பப் படவில்லை.

மருத்துவ மாணவர்களும் ஒரு சில விரிவுரையாளர்களுமே எதிர்க் குரல் எழுப்புகிறார்கள்.

இன்றுயாழ் வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதியில் 21 வைத்தியர்கள் கடமை புரிய வேண்டிய இடத்தில் 6 வைத்தியர்கள் மட்டுமே கடமை புரிகின்றனர்.

வைத்தியசாலையில்இன்னும் பல வெற்றிடங்கள் உண்டு. இவற்றை நிரப்புதல் வேண்டும்.

இருகோணமலை வைத்தியசாலையில் ஒரு விசேட வைத்திய நிபுணர் கூட இல்லை. இந்நிலை மாற வேண்டும்

எமது மருத்துவக் கல்லூரியை நல்ல மனம் படைத்தவர்கள் இனம் கண்டு உதவி புரிய வந்தால் நாம் இலவசமாக இவர்களுக்கு பயிற்சியை வழங்குவோம்.

அத்தோடு காலப் போக்கில் புலமைப் பரிசில் மூலம் மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்குவோம்.

பல விரிவுரையாளர்கள் இன்று வெளிநாடு செல்வதைத் தடுத்து எமது மாணவர்களுக்குச் சேவை செய்ய அவர்களை அழைப்போம்" — இது தலையார் மருத்துவக் கல்லூரி நிர்வாகத்தின் கருத்துக்கள்.

இக் கருத்துக்களை எதிர்த்து கருத்தரங்கில் அபிப்பிராயங்களும் வெளியிடப்பட்டன

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் சார்பில் தெரிவிக்கப்பட்ட மாற்றுக்கருத்துக்கள் வருமாறு:

"மருத்துவபீடத்துடன் பின்னிப் பிணைந்திருந்த பல விரிவுரையாளர்கள் இக் கல்லூரியினால் மருத்துவபீடத்திலிருந்து பிரிக்கப்படுவார்கள்.

எமது மருத்துவபீடத்தில் விரிவுரையாளர்கள் பற்றுக்குறை இருக்கின்றன. எமது பல்கலைக் கழகத்தின் நாம் இதனால் பாதிக்கப்படுகிறோம்.

ஒரு சில மருத்துவர்கள் சேர்ந்து உருவாக்கப்பட்டதுதான் இந்தச் சங்கம் இதனை நாம் மேலும் வளர விட்டோமானால் அனைத்தும் தலையார் உடைமை ஆக்கப்படும். எமது கல்வி நிலை பாதிக்கப்படும்; மாணவர்களின் அறிவுத்திறமை பாதிக்கப்படும்; ஏழை - பணக்காரன் என்ற பேதம் ஏற்படும்.

தரப்படுத்தல் மூலம் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மேலும் பாதிப்படைவார்கள். இல்லையேல் வேறு செயல்களில் இறங்குவார்கள்.

அரசாங்கத் திட்டங்களில் ஒன்றான யாழ். பல்கலைக்கழகம் முடப்படுவதற்கு இந்த தனியார் மருத்துவக் கல்லூரி வழிவகுக்கின்றது.

எனவே இக் கல்லூரி அமைப்பது முழுதாக நிறுத்தப்பட வேண்டும். அமைப்புக்கள் நினைத்தால் இதனைச் சாதிக்க முடியும். இதன் செயற்பாடுகள், ஊழல்கள் பற்றி பாடசாலைகள் தோறும் பிரசாரம் செய்வோம். – இப்படி கருத்து தெரிவிக்கப்பட்டது.

உதய சங்கற்பம்

நேர்மையே நிறைந்த செல்வம், உண்மை பேசி உத்தமனாக வாழ். அதற்கு எத்தனை சோதனை வந்தாலும் தயங்காதே. எதிரிச்சவால் போட்டு முன்னேறு. வெற்றி நிச்சயம்.

-மகாத்மா காந்திஜி.

உதயன்

உண்மை - அநீதிசாமை - கடு நிலைமை

இல: 15, வேத ஒழுங்கை, கொழும்பு: 24805
பிரைவேட் நியூஸ் லிமிடெட், 22073
யாழ்ப்பாணம், 21-12-85 த.பெ. 28

சுவிஸ் தூதுக் குழு என்ன முடிவோடு போகிறது?

சுவிட்சர்லாந்தில் இருந்து வந்த அதிகாரிகள் தூதுக்குழு தனது இரண்டுநாள் யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுக் கொழும்புக்குத் திரும்பியது.

தூதுக்குழுவினர் இங்கு தங்கியிருந்த போது, அடிக்கடி அசம்பாவிதங்கள்—வன்செயல்கள் நடக்கும் வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளுக்கு விஜயஞ் செய்தனர்.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகளையும், மகளிர் அவைப் பிரதிநிதிகளையும் கொண்ட தூதுக் குழுவினரை சுவிஸ் கோஷ்டியினர் சந்தித்துப் பேசினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள முச்சமயத் தலைவர்களையும் சுவிஸ் கோஷ்டியினர் சந்தித்துப் பேசினர் யாழ். மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியுடன் கலந்துரையாடவும் அவர்கள் தவறவில்லை.

1983 வன்செயல்களைத் தொடர்ந்து அயிரக் கணக்கான இலங்கைத் தமிழர்கள் சுவிட்சர்லாந்து சென்றுள்ளனர். இலங்கையில் தமிழர்கள் இம்சிக்கப்படுவதால் தஞ்சம் தருமாறு அவர்கள் சுவிஸ் அரசாங்கத்திடம் கோரியிருந்தார்கள்.

எல்லோருக்கும் அரசியல் தஞ்சம் கொடுப்பதும், அகதிகளாக வைத்துப் பராமரிப்பதும் சுவிட்சர்லாந்துக்குக் கஷ்டமான சங்கடமான காரியமாகி விடலாம் அதனால் அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டும் என அந்நாட்டு அரசு உத்தேசித்தது.

இலங்கைக்குத் திருப்பி அனுப்பினால், தாம் பழிவாங்கப்படுவார்கள் என்றும் வடக்கு மெக்கு மாகாணங்களுக்குச் சென்றால் பாதுகாப்பாக வாழமுடியாது என்றும் அங்குள்ள தமிழர்கள் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர்களை அகதிகளாகவே ஏற்றுக்கொண்டு தமது செலவிலும் பாதுகாப்பிலும் தென்னிலங்கையில் முகாம்களை அமைத்து அவர்களைப் பராமரித்தால் என்ன என்று ஒரு மாற்றுத் திட்டத்தைச் சுவிஸ் அரசாங்கம் தயாரித்ததாம். அதனையும் ஆட்சேபித்துத் தமிழர்கள் சுவிஸ் அரசாங்கத்துக்கு அறிவிப்பு செய்தனர்.

தமிழ் மக்கள் எத்துணை கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்பதை நேரில் அறிந்த பின்னர்தான், தென்னிலங்கையில் அகதிமுகாம்களை நிறுவுவது குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவது என்று சுவிஸ் அரசு கடைபிடிக்க நிச்சயித்தது. அதனைத் தொடர்ந்தே சுவிஸ் தூதுக்கோஷ்டி இங்கு வந்தது.

தமிழர்களைத் திருப்பி அனுப்பினாலோ அல்லது தென் இலங்கையில் அகதி முகாம்களை அமைத்தாலோ ஏற்படக்கூடிய ஆபத்து சரியான முறையில் சுவிஸ் தூதுக்குழுவினருக்கு விளக்கப்பட்டது. பிரஜைகள் குழு – மகளிர் அவைத் தூதுக்குழுவினர் தக்க ஆதாரங்களுடன் அதனை விளக்கி இருக்கிறார்கள்.

1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடந்த கொடூரச் சம்பவங்கள் எவராலும் மறக்க முடியாதவை. அகில உலகமுமே கண்டித்த படுகொலைகள் அவை.

தென்னிலங்கையில் முகாம்களை அமைத்து, தமிழர்களை அங்கு தங்க வைத்தால் அதுவும் ஒரு தமிழர் கொலைக்களமாக மாறாது என்பதற்கு உத்தரவாதம் என்ன? பணயக் கைதிகளாக மாற்றப்படமாட்டார்கள் என்பதற்கு அத்தாட்சி ஏது?

தமிழர்களைப் பற்றித் தமக்கு அக்கறையில்லை என்று கூறிய ஒரு ஜனாதிபதியின் நாட்டில் எப்படித் தமிழர்கள் பாதுகாப்பாக வாழ முடியும்?

வயலில் வேலை செய்யும் விவசாயியும், வர்த்தக ஸ்தாபனத்தில் பணிபுரியும் தொழிலாளியும் வீட்டில் வியாபாரி கொண்டிருக்கும் சிறுவனும் தமிழனாக இருந்தால் பயங்கரவாதியாகிறார்கள்.

சுட்டுக் கொல்லப்படுபவர்களில் அனேகர் பொதுமக்கள். பயங்கரவாதம் என்றால் என்னவென்று தெரியாதவர்கள், தாம் உண்டு தம் தொழில் உண்டு, வீட்டுப் பிரச்சினை உண்டு என்று நாட்களை ஓட்டுபவர்கள்.

தமிழ் மகன் ஒவ்வொருவனும் துப்பாக்கிச் குடு என்றவடிவில் எப்போது எமன் வருவான் என்று ஏக்க வாழ்வு வாழ்கின்றான்.

இதனை இங்கு வந்த சுவிஸ் அதிகாரிகள் உணர்ந்திருப்பார்கள் என நம்புகிறோம்.

கொழும்பில் வைத்து, அவர்களுக்கு உண்மை நிலையின் இருள் வடிவம் தான காட்டப்பட்டிருக்கும். அதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

சுவிஸ்நாட்டவர்கள் மனிதாபிமானம் மிக்கவர்கள். வேறு நாடுகளில் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவோருக்கு பல வித உதவிகளைச் செய்பவர்கள்.

எனவே சுவிஸ் தூதுக் குழுவினர் தாம் நேரிற் கண்டறிந்ததை வைத்து நிதானமான, நியாயமான முடிவுடன் தாயகம் திருப்புவார்கள் என எதிர்பார்ப்போம்.

பொய்யாவிநாழி

குறள்:

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு
ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

பொருள்:

ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்

போராளிகள் அனைவரும் நண்பர்கள்

துண்டுப் பிரசுரம் மூலம் விளக்கம்

யாழ்ப்பாணம், டிச 21

ஓர் உயர்ந்த இலட்சியத்துக்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடும் போராளிகள் அனைவரும் நண்பர்கள் என்பதை உணர வேண்டும்.

தமிழீழ விடுதலைக்காகப் போராடும் போராளிகளே! தமிழ்ச்மூமக்களே! "ஓர் அவசர வேண்டுகோள்" — என்ற தலைப்பில் 'தீப்பொறி' இயக்கம் விடுத்துள்ள துண்டுப் பிரசுர வேண்டுகோளில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அராஜகம் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது.

தமிழ் மக்களின் விமோசனத்துக்காகப் போராடும் போராளிகள் மக்களின் சொத்துக்கள்.

இவர்களை அழிப்பதனால் இந்த இயக்கங்கள் எதனைச் சாதிக்கப் போகின்றன?

நிச்சயமாக விடுதலையை அல்ல.

எமது இழப்புக்காக மக்களைத் துக்க தினம் கொண்டாடுமாறு கேட்கும் தார்மீக பலம் எமக்கு உண்டா?

சகோதரனுக்கு எதிராக ஏவப்பட்ட துப்பாக்கி எமக்கு எதிராக ஏவப்பட்டதாகக் கொள்ளுவோம்.

போராளிகளைத் தமக்குள் போதுமிடும் தவறான தலைமையின் சுய நலங்களை இனங்காண்போம்.

இப்படி அந்த வேண்டுகோளில் கோரப்பட்டுள்ளது.

சிலேட்டு சிந்தனைகள்

திருவெம்பாவை

சாலவகச்சேரி, டிச. 21

நுணாவில் மேற்கு தாமரையம்பதி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும் கைப்பூசத் திலத்தன்று ஸ்ரீவள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி சிலை பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது.

இப்பிரதிஷ்டை வைபவத்தின் போது மேற்படி தேவஸ்தான பிரதம குரு பிரதிஷ்டா விற்தகர், சிவாகம ஞானமணியும் சிவஸ்ரீ.கே.சோமசுந்தரக் குருக்களுக்கு பட்டம் அளிக்கப்படும். மேலும் அவர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார்.

அத்துடன் தேவஸ்தான நாதஸ்வரக் கலைஞர் கைதடி சத்தியநாதன் குழுவினரும் பாராட்டுக் கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.

நீ நல்லவள்; ஆனால் உன் உறக்கமோ பொல்லாதது

அன்னே யிலையுஞ் லெவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீராள்
சின்னங்கள் கேட்டுச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய வின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

பொருள்:

நிற்கும்போதும் நடக்கும்போதும் உறங்குகின்றாயே! அப்படி நாங்கள் பரிசுக்கிகின்றோம் அல்லவா? அந்தகைய நிலையில், போகும்வழியிலே ஒருத்தியைத் தோழி பரிசுகிப்பதாக இச்செய்யுளுக்குப் பொருள் கூறுவது சிறப்புடையதாகும்.

சிவசின்னங்கள் கேட்டதும் 'சிவன்' என்றே கருதிக் கொட்டாவி வந்தாலும் 'சிவா' என்று கொட்டாவி விட்டுக்கொண்டே எழுந்து விடுவாளாம் அக்கன்னி.

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!! என்னும் அந்தத் திவ்ய திருநாமத்தை முழுவதும் சொன்னாலும் உருகாதவர் இருக்கும் இந்தப் பூவுலகில் இவளோ 'தென்னா' என்று சொல்லத் துங்கி முடிப்பதற்குள்ளே தீசேர் மெழுகுபோல் உருகியே விடுவாளாம். அப்போர்ப்பட்ட பக்தியுள்ள இந்தக் கன்னி வேறு விதமாக அல்லவா நடந்துகொண்டிருக்கின்றாள்.

என்னானை, என்னரையன், இன்னமுது என்றெல்லாம் வந்த மற்றக் கன்னிகள் யாபேரும் தவித்தவளிடம் சொல்லிப் பார்த்தும், இந்தத்தோழி தானும் வந்து கலந்துகொண்டு அதுபோல அப்படி ஒன்றும் சொல்லாமல் வன்நெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தாளாம். எழுந்துவந்து கலந்துகொண்ட பின்பும் நின்றும் நடந்தும் இருந்தும் உறங்குபவர்போலக் காணப்படுகின்றாளாம்.

எனவே வந்திருந்த கன்னி ஒருத்தி 'நீ நல்லவள் தான். ஆனால் உனது தூக்கம் பொல்லாதது. நித்திராதேவி கொடியவள். அவளுக்கு நீ அடிமையாகி விட்டாய். அதற்கு நீ என்ன செய்வாய்?' என்று அன்புடன் சொன்னாள்.

ஆனந்தமான அதிகாலைவேளையில் ஏழைபங்காளனை ஏந்திழையாள் ஏத்துதல்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழிலியப்ப இயம்பும் வெண்சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங் கருணை
கேழில் எழும்பொருள்கள் பாடிடினும்
கேட்டிலையோ
வாழியிதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை ஆமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர்
எம்பாவாய்

பொருள்:

'ஆனந்தமான அதிகாலைவேளையில் நாமும் ஆனந்தமாக ஆண்டவனைப்பாடி ஆராதிப்போம்'. என்று ஒரு கன்னிப்பெண் வாய்பேசாமல் மௌனியாயிருந்த தோழியைப் பார்த்துக் கூறுகின்றாள்.

'அர்மவி! கோழிச்சேவல் கூவுகின்றது. பறவைகள் எல்லாம் சந்தோஷமாக ஒலி எழுப்புகின்றன. இல்லிசை நாவாபக்கமும் கேட்கிறது. இசைச்ன் முழங்கவதுபோல் வெண்மை நிறம் பொருந்திய சங்குகள் முழங்குகின்றன. நாங்களும் பரங்கருணைத் தடங்கடலாகிய பரஞ்சோதியான பரமனைப் பாடுகின்றோம். அவ்வாறு நாங்கள் இசையோடு இறைவனை இறைஞ்சிப் பாடும்போது உனக்கு மட்டும் என்ன உறக்கம்? உனது செம்பவள வாயைத் திறந்து பதிலைச் சொல்லுவாயாக' என்கின்றாள் தோழி.

ஒப்பற்ற இறைவனின் ஒப்பில்லாத சிறந்த செயல்களையும் நாம் புகழ்ந்து பாடுகின்றோமே, உன்காதுக்குக் கேட்கவில்லையா? அவை உன் காதுகளில் விழாதபடி அப்படி என்ன நித்திரை? இப்படியும் ஒரு தூக்கமா? உன்னைப்போல ஒருத்தியை நான் காணவில்லை. அடடெய்வமே! வாய்திறந்து பதிலாவது சொல்லமாட்டாயா? அங்ஙனம் வாய் திறந்து பதிலும் சொல்லமுடியாத நிலையில் இருக்கின்றாயா? என்கிறாள்.

'இறைவனோ இன்ப அன்புக்கடல்; அதிற் குளிப்பதானால் அவனருள் வேண்டும். நீயோ ஆண்டவனிடம் அருள்மிகு அன்புடையவள் என்று பேர் எடுத்திருக்கிறாய். உறக்கம்தானா அதற்கு அடையாளம்?' என்று கேட்கிறாள்.

'ஊழிக்காலத்திலும் ஒப்பற்ற ஒரு தனி முதல்வனாய் நின்று ஏழைபங்காளனாய் விளங்கும் இறைவனை ஏந்திழையாளே நீ ஏத்துவாயாக. எங்களுடன் சேர்ந்துபாடி உன்னுரிமையை போக்கிக் கொள்வாய்' என்று கூறமுடிக்கிறாள் மற்றத் தோழி.

திருமணச் சேவை
பெற்றோர்களே!
வெகுவிரைவில் மணமகன், மணமகள் தெரிவுசெய்ய
உடன் தொடர்புகொள்க:
சமுத்திரா மல்ரி சேவிஸ்
303, பலாலி ரோட்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

இதயன்
21-12-85

காணி, வீடு வாங்கி விற்கும் சேவை
காணிகளை வாங்கவோ, விற்கவோ
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
சமுத்திரா மல்ரி சேவிஸ்
303, பலாலி ரோட்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

வடக்கு, கிழக்கு இணைந்த

சுயாட்சி பெறுவதில் கூட்டணி பிடிவாதம்

விட்டுக் கொடுக்கத் தயாரில்லை

புதுடில்லி, டிச.20

வடக்கு — கிழக்கு இணைத்த மாநிலசுயாட்சி பெறுவதில் தமிழர் விடுதலைக் கூட்டணி பிடிவாதமாக இருக்கின்றது.

இப்படி 'இந்து' ஆங்கில நாளிகழ் செய்தி வெளியிட்டு உள்ளது.

கூட்டணித் தலைவர் ஒருவரை மேற்கோள் காட்டி, சென்னையில் இருந்து வெளிவரும் 'இந்து' ஒச்செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தமிழரின் தாயகத்தைத் துண்டு போட கூட்டணி அனுமதிக்காது என்று அந்தக் கூட்டணித் தலைவர் கூறியதாகவும் 'இந்து' செய்தி கூறுகின்றது.

கூட்டணியினர் மாற்று யோசனைத் திட்டத்தின் மீது சரியான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளாவிட்டால், இலங்கையுடன் நேரடிப் பேச்சுக்களில் கூட்டணி கலந்து கொள்ள மாட்டாது

இப்படி அந்தக் கூட்டணித் தலைவர் சொன்னதாக 'இந்து' தெரிவித்துள்ளது.

இலங்கையில் கூட்டணி விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்பதையும் கூட்டணித் தலைவர் தெளிவு படுத்தினார்—இப்படி அச்செய்தி கூறுகின்றது.

"தமிழ்—முஸ்லிம் மக்களை பிளவுபடுத்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஜியாவின் விஜயத்தை இலங்கை பயன்படுத்தியது துரதிஷ்டவசமானது

எனினும் தமிழரின் நியாயமான கோரிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜியா மதிப்பு அளிப்பார் என்றும் அந்தக் கூட்டணித் தலைவர் சொன்னார்

இப்படி அச்செய்தி கூறுகின்றது.

ஒய்வூதிய நாட்கள்

கொழும்பு, டிச.21

1986 ஆம் ஆண்டின் பன்னிரண்டு மாதங்களிலும் ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஓய்வூதிய திணைக்களம் ஆணையாளர் திரு. டொனல்ட் அபயசிங்கா வெளியிட்டுள்ள அறிக்கையின் படி ஓய்வூதியத் திகதி விபரம் வருமாறு:-

ஜனவரி	— 09
பெப்ரவரி	— 13
மார்ச்	— 13
ஏப்ரல்	— 09
மே	— 15
ஜூன்	— 12
ஜூலை	— 15
ஆகஸ்ட்	— 14
செப்டெம்பர்	— 11
அக்டோபர்	— 15
நவம்பர்	— 13
டிசம்பர்	— 11

இன்று

யாழ்ப்பாணம், டிச.21

கவிஞர் வே. இயாத்துரை அவர்களின் உடல் நலம் வேண்டி விசேட பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று இன்று காலை 9 மணிக்கு நடைபெறுகிறது.

அரியாலை கலைமகள் ஆலயத்தில் அகில இலங்கைக் கம்பன் கழகம் இந்தக் கூட்டத்தை நடத்துகிறது.

கலாநிதி அ. சண்முகதாஸ் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

படையினர் சோதனை, நடைபவனி

மட்டக்களப்பில் போக்குவரத்து கஷ்டம்

மட்டக்களப்பு, டிச 21

மட்டக்களப்பு பகுதியில் ஆயுதப்படையினரின் கால்நடை ரோந்து சோதனைகளையடுத்து வாகன போக்குவரத்து அடிக்கடி ஸ்தம்பிதம் அடைகிறது

இதுகுறித்து பொதுமக்கள் மத்தியிலிருந்து அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதப்படையினர் கால நடையாகச் செல்லும் போது எந்தவொரு வாகனங்களும் அவர்களை கடந்து செல்லமுடியாத சூழ்நிலை ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. வாகனங்களும் படையினர் பின்னால் ஊர்ந்து செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை விதித்தடைகளினாலும் சோதனைகளினாலும் வாகன போக்குவரத்து மேலும் தாமதமடைவதாகக் கூறப்படுகிறது

கல்முனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய பகுதிகளில் ஹர்த்தால் பூரணமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இ போ. ச. பஸ்கள், தனியார் பஸ்கள், தனியார் வண்டிகள் எவையும் ஓடவில்லை. வர்த்தக நிலையங்கள், அரிசி ஆலைகள் போன்றவை இழுத்து மூடப்பட்டிருந்தன. அரசாங்க அலுவலகங்களில் பணியாளர் தொகை குறைவாக இருந்தது. விவசாயிகள் எவரும் வயலுக்குச் செல்லவில்லை.

ஹர்த்தால் அமைதியாகவும், அசம்பாவிதமின்றியும் நடத்தவேண்டும் என்ற நோக்கத்தில் சமாந்துறைப் பகுதி மக்கள் பிரார்த்தனை நோன்புகளில் ஈடுபட்டிருந்தனர்.

சமாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களில் எழுபது வீதமானோர் தமிழ் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

கிளிநொச்சி

இராணுவ முகாம் விஸ்தரிப்பினால்

பொதுமக்களுக்கு நெருக்கடி

கிளிநொச்சி, டிச. 21

கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டமையைத் தொடர்ந்து கிளிநொச்சி பிரதம தால நிலையம், நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றை வேறு இடங்களுக்கு மாற்றவேண்டிய நிலை எழுந்துள்ளது.

இராணுவ முகாமுக்கு அருகே உள்ள அலுவலகங்களுக்கு வர ஊழியர்களும் பொதுமக்களும் அச்சம் கொண்டுள்ளனர்.

இதனால் கிளிநொச்சி நீர்ப்பாசனபொறியியலாளர் அலுவலகம் இரணைமடு குளத்திற்கு அருகில் உள்ள நீர்ப்பாசன இலாகாக் கட்டடத்திற்கு மாறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தை வேறு இடம் மாற்றுவதற்கு உடனடியாக கட்டடவசதிகள் கிடைக்கவில்லை.

இதேவேளை கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை முன்பாக உள்ள இரண்டு தனியார் கட்டடங்களும் இராணுவத்தால் கவிகரிக்கப்படவுள்ளதால் அரசினர் வைத்தியசாலையிலும் உத்தியோகத்தர்கள் கடமைக்கு வர அச்சம் கொண்டுள்ளனர்.

ரூபவாகினி

மாலை: 21-12-1985

5-00 — செய்திகள்
5-05 — சப் மரீனர் – சார்ட்டூன்
5-10 — உங்கள் உடலைப் பற்றி
5-30 — உலக விளையாட்டு ஸ்பெஷல்
6-30 — செய்திகள் தமிழ்
7-00 — குரங்குகளின் கிரகம்
8-00 — செய்திகள் சிங்களம்
8-25 — 'யஷோரலாய' டெலி நாடகம்
9-00 — செய்திகள் ஆங்கிலம்
9-25 — விவரணச் சித்திரம்
9-50 — 'மக்னெய்ன்ஸ் லோ' துப்பறியும் தொடர்
10-40 — ஒளிபரப்பு முடிவு.

புதிதாக 500 வீரர்கள்

யாழ்ப்பாணம், டிச. 21

அம்பாறை, குண்டபட்டவன என்ற இடத்தில் பயிற்சி பெற்ற 500 இராணுவ வீரர்கள் தேற்றி பயிற்சி முடிந்து வெளியேறினர்.

இதுசம்பந்தமான வைபவம் நேற்று மாலை இடம்பெற்றது.

தமிழ் மக்களின் அரசியல் பற்றி முஸ்லிம் தலைவர் சொன்ன கதை

அம்பாறை, டிச 21

"தமிழ்மக்கள் அனுபவ முதிர்ச்சிக்கும், தலைமைத்துவத்துக்கும் மதிப்பளித்தே தமது அரசியலை வளர்த்து வருகின்றனர். எம்மவர்கள் தமிழ் மக்களின் இந்த சிறந்த செயற்பாட்டை முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும்".

கல்முனை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்முதலியார் ஜஞப். எம். எஸ். காரியப்பர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த சாய்ந்தமருது அரசினர் வைத்திய சாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட, இஸ்லாமிய கலாச்சார நிலையத்திறப்பு விழாவில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே யே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கேட்முதலியார் ஜஞப். காரியப்பர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

நாடாளுமன்றத்தில் ஒரு நாள் நான் இருந்த போது மறைந்த தமிழ்த் தலைவர் அமரர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை கூட்டணி செயலாளர் திரு. அமிர்தலிங்கமும் மற்றொருவரும் கைத்தாங்கலாகக் கூட்டி வந்து ஆசனத்தில் அமர்த்தினர்.

இதைப் பார்த்திருந்த நான் பின்னர் திரு. அமிர்தலிங்கத்திடம், இந்த தள்ளாத வயதில் திரு. செல்வநாயகம் அவர்களை இப்படி சிரமப்படுக்காது, உங்களில் மற்றொருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பலாமே என்னினுவினர்.

அப்பொழுது திரு. அமிர்தலிங்கம், தாங்கள் அனுபவத்திற்கும், முதிர்ச்சிக்கும் மதிப்பளித்தே அரசியல் நடத்வதாகக் கூறினர்.

உண்மையில் அவர்களது இந்தக் கூற்று என்னை மெய்சிலிர்க்கச் செய்தது.

தமிழ் மக்களின் இந்த முன்மாதியான அரசியல் நடைமுறையை எமது மக்களும் கருத்திற் கொள்ள வேண்டும்"— இப்படி அவர் கூறினர்.

திடசித்தமும்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த இ. தொ. கா. திட்டமிட்டுள்ளது.

பொங்கல் அன்று பிரார்த்தனை இயக்கம் அங்குரார்ப்பணஞ் செய்யப்படும்.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

இந்தியாவில் தங்கி இருக்கும் சமயம் அமைச்சர் தொண்டமான் இந்திய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவிலும் கலந்து கொள்வார்.

டிசம்பர் 28, 29ஆம் திகதிகளில் பம்பாயில் காங்கிரஸ் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன. அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அமைச்சர் தொண்டமான் இலங்கை இனப்பிரச்சினை பற்றி இந்தியத் தலைவர்களுடன் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அநீதி ஒழியும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்று யோசனை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டும்.

அப்படி இலங்கை அரசு நடக்கத் தவறும் பட்சத்தில் இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சு நடத்துவதாத்தியக் கூறுகள் கிடையா - இப்படி கூட்டணி பிரதிநிதி மேலும் சொன்னார்.

பதற்றம் பரபரப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வானில் வந்தவர்களுடன் மல்லுக்கட்டி தன் தோழியைக் காக்கமுயன்றாளாம். எனினும் இறுதியில் அவள் முயற்சி தோற்றது.

இவ்வளவு சம்பவமும் நடந்த போது அயலில் பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்களில் எவரும் அதனை தடுக்க முயலவில்லை.

மாணவியை கடத்திச் சென்ற வான் பிரதான வீதியில் திடீரென இயந்திரக் கோளாறு காரணமாக இயங்க மறுத்தது.

அவ்வேளையில் பிரதான வீதியிலும் எங்கும் பரபரப்புக் காணப்பட்டது.

அவசர அவசரமாக கொழும்புத்துறை பக்கத் திலிருந்து வந்த வான்களும் மினி பஸ்களும் குறுக்கு மறுக்குமாக நிற்பாட்டப்பட்டிருந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தை பாவித்து அந்த இளம் மாணவி வாவிலிருந்து சாதுரியமாக தப்பி விட்டதாக தெரியவருகிறது.

முடிவுகள் வெளியாகின

தாகேயடி, டிச 21

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலிருந்து 1985ம் ஆண்டு டிசம்பரில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய வர்களின் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

தமிழ், சமூகக் கல்வி, மனையியல், இந்து சமயம், சங்கீதம், நடனம், ஆரம்பக் கல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டன.

Bata
SHOW ROOM
19, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
நத்தார் மலிவு விற்பனை
சில தினங்களுக்கு மட்டுமே!
உங்கள் பாதங்களின் பாத அணி பாட்டா
விரைந்திடுவீர்!
அதன் வனப்பை தேர்ந்திடுவீர்!!
Bata

அரசடு வாரும் வெளியிடுவோரும்: தமிழ்ப்பிரதா எக்ஸ்போட்க் லிமிட்டெட், 807 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி: 21-12-1985

விளையாட்டரங்கு

பாடும் மீன் அணியின் அபார ஆட்டம்!

பத்து கோல்களினால் வெற்றி

— விளையாட்டுச்செய்தியாளர்:- சண், ஜோன்சன் —

யாழ்ப்பாணம், டிச. 21

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் உரும்பராய் சென்மைக்கல் விளையாட்டுக் கழகத்தை 11க்கு 1என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் திருநெல்வேலி பாரதி சனசமூக நிலைய ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் ஓர் அங்கமாகவே இப் போட்டி நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் பாடும் மீன் விளையாட்டுக் கழக வீரர்கள் திறமையாக ஆடினார்கள்.

36 விளையாட்டுக் கழக அணிகள் இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றுகின்றன.

இன்று நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியில் பாரைஷூர் சென், அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியும் ஆவரங்கால் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியும் நேரடி மோதலில் இறங்குகின்றன.

மற்றைய போட்டியில் யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் அணியை எதிர்த்து யோகபுரம் அண்ணா விளையாட்டுக் கழக (ஏ) அணி ஆடும்.

நேற்றைய போட்டிக்கு திரு. தேவதாஸ் மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

இப்போட்டிகள் யாவும் கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் உள்ள 'லோக்கேல்' விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது

இன்று இறுதி ஆட்டம்

சுன்னாகம், டிச. 21

சுன்னாகம் மயிலணி வடக்கு வளர்பிறை விளையாட்டுக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவிழாவை யொட்டி நடத்தப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டசுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறும்.

7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான இந்தச் சுற்றுப்போட்டியில் 24 கழக அணிகள் பங்கு பற்றின.

இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் கழக அணியும், ஊரெழு பறக்கும் ஜேய் கழக அணியும் மோதுகின்றன.

சுன்னாகம் பூநராயர் கோவில் மைதானத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகும்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

கொழும்பகம் அரி...

(1-ஆம் பக்கத் தொடர்)

னர் இன்னொரு இளைஞனைப் பிடித்தனர்.

அவனும் துப்பாக்கிச் சூடு பட்டு மரணமானான், அவனின் சடலம் இனந்தெரியாதவர்களினால் பின்னர் கடத்தப்பட்டது.

அகற்றப்பின்னர் பதற்றத்துடன் ஓடி வந்த 17 வயது இளம் பெண் சுப்பிரமணியம் ரஞ்சிதமலரையும் துப்பாக்கிச் சூடு தாக்கியது.

இவர் கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலய மாணவி. முதுகுப்புறமாக துப்பாக்கிச் சூண்டு இவரைத் தாக்கியது

இவருக்கு யாழ் ஆஸ்பத்திரியில் அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் சாமாரியாக துப்பாக்கிச் சூட்டுக்கள் வானத்தில் இருந்தும் தரையில் இருந்தும் தீர்க்கப்பட்டன.

வீடுகள், ஆலயங்கள், பாடசாலை ஆகியவற்றின் கூரைகளும் பாகிக்கப்பட்டன. கலர்களும் துப்பாக்கி சூடுகளினால் பாகிக்கப்பட்டன. வேலிகளும் பிடுங்கப்பட்டன.

அரியாலை சோட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோவில் வளவில் இருந்த வீடு ஒன்றையும் வானத்தில் இருந்து வந்த துப்பாக்கிச் சூடு தாக்கியது. வீட்டினுள் இருந்த கப்பிரமணிய ஐயர் ஜீவா அம்மா (வயது 39)வுக்கு இடது காலில் குண்டு பாய்ந்தது இரண்டு குழந்தைகளின் தாயார் இவர்.

இவருக்கும் யாழ் ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதுவிடயமில்—ஹெலிகொப்டர் ஒன்றில் இராணுவ வீரர் ஒருவரைக் கைக்காய்கலாக ஏனைய இராணுவ வீரர்கள் ஏற்றிச் சென்றனர்.

ஆயுதப் படையினர் பின்னர் ரயில் பாதை வழியாக நாவற்குழி முகாமுக்குச் சென்றனர்.

திரும்பிச் செல்கையில் படையினர் இன்னும் இரண்டு பேரைக் கைது செய்து கொண்டு சென்றனர்

தமிழர்கள் புகலி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரிவாக எடுத்து விளக்கினர்.

இவற்றை அமைதியாக செவிசாய்த்த பின்னர் இத் தூது கோஷ்டியினர் தேவையான விவரங்களை குறித்துக் கொண்டனர். வவுனியா சப்பவங்களை சங். சகோதரிகள் சிலர் எடுத்துக் கூறினர். சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளும் தூதுக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

சுவாமி சித்ரூபானந்தா சுவிஸ் அரசாங்க தூது கோஷ்டியிடம் கையளித்த மகஜரில் பின்வருமாறு குறிப்பிட்டு உள்ளார்:-

"வன்செயல் காரணமாகப் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து இங்கிலாந்து, மே. ஜேர்மனி, கனடா, பிரான்ஸ், ஸ்வீடியா, பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளுக்குப் புகலிடம் தேடிச் சென்றுள்ளனர்.

இந்த நாட்டில் எப்பகுதியிலும் பாதுகாப்பாக வாழும் சூழ்நிலை நிலவாத காரணத்தினால் அவர்கள் அவ்வாறு வெளிநாடு சென்றுள்ளனர்.

அகதிகளாக வெளிநாடு சென்றுள்ளவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் அவர்கள் தென்னிலங்கையில் குடியமர்த்தப்படலாம். அது பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

பருத்தித்துறையில் மக்கள் வாழும் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு உள்ளமையால் இரு பிரபல பாடசாலைகள் வேறிடத்துக்கு மாற்றப்பட்டன. கோயில்கள் மூடப்பட்டுள்ளன. பல குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளன. மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். பல குடும்பங்கள் தமது குடும்பத் தலைவர்களை, உழைப்பாளர்களை இழந்துள்ளன."

என்று தனது மகஜரில் சுவாமி சித்ரூபானந்தா வலியுறுத்தி உள்ளார்.

* மேற்கு ஜெர்மனி
* பிரான்ஸ்
* இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு உங்களை எமது பிரதிநிதி
DECEMBER 26ஆம் திகதி
இங்கிருந்து அழைத்துச் செல்வார்.
மற்றும்
பாஸ்போர்ட், பெண்ட், விசா
என்பவற்றுக்குத் தொடர்புகொள்ளவும்.
லிப்ருஸ் லிமிட்.,
R. G.கட்டடம், 60, Sea Beach Road,
70,ஸ்ரான்லி வீதி, PETTAH,
யாழ்ப்பாணம். T'Phone: 29148